

கருணாநிதி நூற்றாண்டு கருத்தரங்கு தொடக்க விழாவில், 'கருணாநிதியின் இலக்கிய ஆளுமை' என்ற சிறப்பு மலரை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டபோது எடுத்த படம். அருகில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சாகித்ய அகாடமி செயலாளர் சீனிவாசராவ், ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், கவிஞர் வைரமுத்து ஆகியோர் உள்ளனர்.

# தமிழ் சமூகத்தில் கருணாநிதி போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும்

## முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூன்.28-

தமிழ் சமூகத்தில் கருணாநிதி போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

### கருணாநிதி நூற்றாண்டு கருத்தரங்கு

கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி சாகித்ய அகாடமி, டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சிறப்பு நிலை தமிழ்த்துறை சார்பில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் கருணாநிதி நூற்றாண்டு 2 நாள் கருத்தரங்கம் நேற்று தொடங்கியது.

கருத்தரங்கை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து பேசியதாவது:-

தொட்ட துறைகள் எல்லாவற்றிலும் கோலோச்சிய தலைவர் கருணாநிதி. இலக்கியத்தைத்தான் இளைப்பாறும் நிழலாக கருதினார். அதனால் தான் "எனது செங்கோலை யாரும் பறித்துவிடலாம், ஆனால், எனது எழுதுகோலை யாராலும் பறிக்க முடியாது" என்று சொன்னார். கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை ஜவஹர்லால் நேரு பல்கலைக் சமூகத்துடன் இணைந்து இங்கு கொண்டாடுவது சிறப்புக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

கருணாநிதி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஒரு தனி இருக்கை இருக்க வேண்டும் என்று விரும்பி, அதைச்செயல்படுத்திக்காட்டினார். 15 ஆண்டுகள் கழித்து, இன்றைக்கு அந்த இருக்கையை தனி ஒரு துறையாக வளர்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த வகையில் 'தமிழ் இலக்கியவியல்' என்ற தனித்துறையை உருவாக்க ரூ.5 கோடியே 30 லட்சம் வழங்கினோம். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பன்னோக்கு கலையரங்கத்துக்கு அருகே திருவள்ளுவரின் சிலை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### ரூ.4.25 கோடி நூல் உரிமை

சாகித்ய அகாடமியின் விருதுபெறும் படைப்பாளர்களுக்கும் வீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்து கருணாநிதியின் பிறந்த நாளன்று, 'கனவு இல்லம்' என்று ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினேன். இந்த திட்டத்தில் இதுவரைக்கும் 15 அறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசு கனவு இல்லம் வழங்கி இருக்கிறது. பரிசுத்தொகை ரூ.1 லட்சம் என்றால், வீட்டின் மதிப்பு சுமார் ரூ.1 கோடிக்கும் மேல். அதுவும், அந்த வீட்டிற்கான பத்திர செலவு முதலானவற்றையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. கனவு இல்லம் திட்டத்தின் நீட்சியாக சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்றவர்களுக்கும் கனவு இல்லம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு கனவு இல்லம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டம் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் இதனை நாம் செயல்படுத்தி இருக்கிறோம். இதற்கெல்லாம் ஒரே நோக்கம், படைப்பாளிகளை, அவர்கள் வாழும் காலத்திலேயே போற்ற வேண்டும் என்பது தான். எழுத்தாளரைப் போற்றும் சமூகம்தான் உயர்ந்த சமூகமாக இருக்க முடியும்.

இலக்கியவாதிகளுக்காக கருணாநிதி செய்த ஏராளமான பணிகளில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க ஒன்றுதான் அவர் முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவர்களின் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையாக ரூ.7 கோடியே 76 லட்சத்தை வழங்கியது. அவரின் அடியொற்றி, நான் முதல்-அமைச்சராக பொறுப்பேற்றது முதல் இந்த 4 ஆண்டுகளில் 36 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூலுரிமைத்தொகையாக ரூ.4 கோடியே 25 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

### இன்று நிறைவு விழா

தமிழ்ச் சமூகத்தில் கருணாநிதி போன்ற படைப்பாளிகள் உருவாக வேண்டும். படைப்பாற்றல் பெற்றவர்கள் தொடர்ந்து தங்களின் படைப்பை எழுதி வழங்க வேண்டும். படைப்பாளிகள் அவர்கள் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெற வேண்டும். இதைத்தான் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது. சாகித்ய அகாடமி போன்ற அமைப்புகளும் இந்தப் பணியை தொய்வில்லாமல் தொடர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் கருணாநிதியின் இலக்கிய ஆளுமை என்ற சிறப்பு மலரை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் சாகித்ய அகாடமியின் செயலாளர் சீனிவாசராவ் வரவேற்று பேசினார். அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, மேயர் பிரியா, எம்.பி.க்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கனிமொழி எம்.பி., ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சாந்திஸ்ரீ துலிப்புடி பண்டிட், கவிஞர் வைரமுத்து உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். கருத்தரங்கு நிறைவு விழா இன்று (சனிக்கிழமை) மாலை நடைபெறுகிறது. இதில் கனிமொழி எம்.பி. கலந்துகொள்கிறார்.

### விஜய் படத்தால் பரபரப்பு

கருணாநிதி நூற்றாண்டு 2 நாள் கருத்தரங்க தொடக்க விழாவில் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். விழாவுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை தருவதற்கு முன்பாக மாணவர் ஒருவர் விஜய் உருவத்துடன் கூடிய கைக்குட்டையை காண்பித்தார். மற்றொரு மாணவர் செல்போனில் விஜய் படத்தை காட்டினார். அரசு விழாவில் நடந்த இந்த நிகழ்வு பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து அந்த மாணவர்களை போலீசார் விசாரணைக்கு அழைத்து சென்றனர்.